**விஸ்வதீப்தி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி**

**ஒன்றாம் வகுப்பு                    தமிழ்                    இரண்டாம் பருவம்**

**கற்றல் பயிற்சித் தாள்**

**ஆத்திச்சூடி**

**I. பொருள் தருக**:

1. ஓதுவது - படிப்பது
2. ஐயம் - பகிர்ந்து
3. ஏற்பது - ஏற்று வாழ்வது
4. ஔவியம் - புறங்கூறுதல்
5. ஒப்புரவு - ஒற்றுமை பண்பு

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. **ஏற்பது** இகழ்ச்சி.
2. **ஐயம்** இட்டு உண்.
3. **ஒப்புரவு** ஒழுகு.
4. **ஓதுவது** ஒழியேல்.
5. **ஔவியம்** பேசேல்.

**III. வினா விடை:**

1. எவற்றை இகழ்ந்து பேசக்கூடாது?

**பிறர் குற்றம் குறைகளை இகழ்ந்து பேசக்கூடாது.**

2. கீழான செயல் எது?

**பிறரிடம் பிச்சை வாங்குவது கீழான செயலாகும்.**

3. கண்ணாக மதிக்கப்பட வேண்டியவை எவை?

**கண்ணாக மதிக்கப்பட வேண்டியவை மொழிப்பாடம் ,கணிதம்.**

4. எவ்வாறு உண்ண வேண்டும்?

**எல்லோருக்கும் பகிர்ந்து கொடுத்து உண்ணுதல் வேண்டும்**

5. எவற்றை இகழ்ந்து பேசக்கூடாது?

**பிறர் குற்றம் குறைகளை இகழ்ந்து பேசக்கூடாது.**

6. நாள்தோறும் என்ன செய்தல் வேண்டும்?

**நாள்தோறும் நல்ல நூல்களை கற்க வேண்டும்.**

7. மெய்யெழுத்துக்கள் எத்தனை? அவை யாவை?

**மெய்யெழுத்துக்கள் - 18 அவை**

**க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம் ய் ர் ல் வ் ழ் ள் ற் ன்.**

8. மெய் எழுத்துக்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

**மெய்யெழுத்துக்கள் மூன்று வகைப்படும். அவை**

- **வல்லினம் - க ச ட த ப ற**
- **மெல்லினம் - ங ஞ ண ந ம ன**
- **இடையினம் - ய ர ல வ ழ ள**

9. வண்ணங்களின் பெயர்களை எழுதுக?

- **மஞ்சள்**
- **பச்சை**
- **ஆரஞ்சு**
- **இளஞ்சிவப்பு**
- **வெள்ளை**
- **ஊதா.**

10. சுவைகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

சுவைகள் ஆறு வகைப்படும். அவை

- **இனிப்பு**
- **புளிப்பு**
- **கசப்பு**
- **கார்ப்பு**
- **உவர்ப்பு**
- **துவர்ப்பு.**

11.கரும்பு என்ன சுவை உடையது?

**கரும்பு இனிப்பு சுவை உடையது.**

12.பாகற்காய் என்ன சுவை உடையது?

**பாகற்காய் கசப்பு சுவை உடையது.**

13.மிளகு என்ன சுவை உடையது?

**மிளகு கார்ப்பு சுவை உடையது.**

## உயிர்களிடத்து அன்பு வேண்டும்

I. **கோடிட்ட இடத்தை நிரப்புக:**

1. பூனையின் நிறம் **வெள்ளை.**
2. பாலை **பருகி** மகிழ்வாள்.
3. **அன்பே** தெய்வம்.
4. நாய் **நன்றியோடு** பழகும்.

II. **வீட்டு விலங்குகள் சிலவற்றை கூறுக**:

**நாய், ஆடு, மாடு, பூனை, முயல், சேவல், கிளி, புறா, வாத்து.**

III. **வினா விடை**:

1. மாலா எந்த வகுப்பு மாணவி

**மாலா ஒன்றாம் வகுப்பு மாணவி.**

2.கன்றுக்குட்டி எவ்வாறு ஓடும்

**கன்றுக்குட்டி துள்ளி குதித்து ஓடும்.**

3. மாலா வளர்த்த பூனை குட்டியின் பெயர் என்ன?

**மாலா வளர்த்த பூனைக்குட்டியின் பெயர் ரோசி.**

4. மாலா பசுவிற்கு நாள்தோறும் என்னென்ன தருவாள்?

**பசுவிற்கு மாலா பழத்தோலும் பழைய சோற்று நீரும் தருவாள்.**

5. இப்பாடம் உணர்த்தும் நீதி யாது?

**உயிர்களிடத்தில் அன்பு செலுத்துதல் வேண்டும்.**

6. உயிர் மெய் எழுத்துக்கள் எவ்வாறு உருவாகிறது?

**உயிர் எழுத்தும் மெய் எழுத்தும் சேர்ந்து உயிர்மெய் எழுத்துக்கள் உருவாகிறது.**

## குறில் நெடில் வேறுபாடு அறிதல்

| | | |
|---|---|---|
| 1. பல் - பால் | 2. கல் - கால் | 3. கண் - காண் |
| 4. படம் - பாடம் | 5. தடி - தாடி | 6. விடு - வீடு |
| 1. பாடி- படி | 2. மாடி - மடி | 3. கூறி - குறி |
| 4. பாடு - படு | 5.ஆரம் - அரம் | |

I. **ஒன்று முதல் பத்து வரை எண்களை எழுதுக**:

- ஒன்று
- இரண்டு
- மூன்று
- நான்கு
- ஐந்து
- ஆறு

- ஏழு
- எட்டு
- ஒன்பது
- பத்து.

II. **படம் பார்த்து பெயரை எழுதுக:**



**நாய்**



**தொப்பி**



**பந்து**



**கண்**



**பட்டம்**



**சங்கு**

III. **வடமொழி எழுத்துக்களை எழுதவும்:**

ஜ ஜா ஜி ஜூ ஜே ஸ்ரீ ஹ க்ஷ

IV. **பழங்களின் பெயர்கள்:**

- மாம்பழம்
- பலாப்பழம்
- வாழைப்பழம்
- திராட்சை
- கொய்யா
- பப்பாளி
- பலா
- மாதுளை
- சப்போட்டா.

V. **காய்களின் பெயர்கள்:**

- முருங்கைக்காய்
- முட்டை கோஸ்
- பச்சை மிளகாய்
- வெண்டைக்காய்
- கேரட்
- உருளைக்கிழங்கு
- கத்தரிக்காய்
- பாகற்காய்
- பீட்ரூட்
- சௌசௌ.

VI. **சுவைகளின் பெயர்கள்:**

- இனிப்பு
- புளிப்பு
- கசப்பு

- உவர்ப்பு
- துவர்ப்பு
- கார்ப்பு

## இலக்கணம்

### பால்

1. பால் என்றால் என்ன?

**பால் என்றால் பகுப்பு என்பது பொருள்.**

2. பால் எத்தனை வகைப்படும் அவை யாவை?

**பால் ஐந்து வகைப்படும் அவை:**

- **ஆண்பால்**
- **பலர்பால்**
- **பலவின்பால்.**
- **பெண்பால்**
- **ஒன்றன்பால்**

- ஆணைக் குறிப்பது ஆண்பால். எடுத்துக்காட்டு: அப்பா
- பெண்ணை குறிப்பது பெண்பால். எடுத்துக்காட்டு: தோழி
- பலரைக்குறிப்பது பலர்பால். எடுத்துக்காட்டு: சிறுவர்கள்
- அஃறிணையில் ஓர் உயிரையோ பொருளையோ குறிப்பது ஒன்றன்பால். எடுத்துக்காட்டு: கோழி
- அஃறிணையில் பல உயிர்களையோ பொருள்களையோ குறிப்பது பலவின்பால். எடுத்துக்காட்டு: வீடுகள்

3. **ஒருமை பன்மை**

- செடி - செடிகள்
- எழுதுகோல் - எழுதுகோல்கள்
- படம் - படங்கள்
- பந்து - பந்துகள்
- பூ - பூக்கள்
- புத்தகம் - புத்தகங்கள்
- பறவை - பறவைகள்

4. தமிழ் மாதங்கள் எத்தனை அவை யாவை?

தமிழ் மாதங்கள் 12 அவை.

- சித்திரை
- ஆவணி
- மார்கழி
- வைகாசி
- புரட்டாசி
- தை
- ஆனி
- ஐப்பசி
- மாசி
- ஆடி
- கார்த்திகை
- பங்குனி

5. ஆங்கில மாதங்கள் எத்தனை அவை யாவை?

ஆங்கில மாதங்கள் 12 அவை

- ஜனவரி
- பிப்ரவரி
- மார்ச்
- ஏப்ரல்
- மே
- ஜூன்
- ஜூலை
- ஆகஸ்ட்
- செப்டம்பர்
- அக்டோபர்
- நவம்பர்
- டிசம்பர்

6. திசைகள் எத்தனை அவை யாவை?

திசைகள் நான்கு அவை:

- கிழக்கு
- மேற்கு
- வடக்கு
- தெற்கு

7. வாரத்தின் நாட்கள் எத்தனை அவை யாவை?

வாரத்தின் நாட்கள் ஏழு

- ஞாயிற்றுக்கிழமை
- திங்கட்கிழமை
- செவ்வாய்க்கிழமை
- புதன்கிழமை
- வியாழக்கிழமை
- வெள்ளிக்கிழமை
- சனிக்கிழமை.

I. **கோடிட்ட இடத்தை நிரப்புக:**

1. ஞானம் வந்த கிழமை **ஞாயிற்றுக்கிழமை** .
2. திருவிழா நடந்த நாள் **திங்கட்கிழமை.**
3. சென்னை சென்ற கிழமை **செவ்வாய்க்கிழமை** .
4. புத்தாடை வாங்கிய நாள் **புதன்கிழமை.**
5. விளையாட்டில் சேர்ந்த கிழமை **வியாழக்கிழமை.**
6. விளையாட்டில் வெற்றி பெற்ற நாள் **வெள்ளிக்கிழமை**.
7. சான்றிதழ் பெற்ற நாள் **சனிக்கிழமை**.

## குரங்கும் தூக்கணாங்குருவியும்

**I. விடுபட்ட எழுத்துக்களை எழுதுக:**

1. ஒரு காட்டில் உயர்ந்த மரம் இருந்தது
2. ஒருநாள் பெருமழை பெய்தது
3. புத்திமதி கூறியது
4. கோபத்தோடு தாவி சென்றது.
5. குருவி மிகவும் வருந்தியது.

**II. வினா விடை:**

1. மரத்தில் எவை வாழ்ந்து வந்தன?

**குரங்கும் தூக்கணாங்குருவியும் வாழ்ந்து வந்தன.**

2. குரங்கு ஏன் நடுங்கியது?

**மழையில் நனைந்ததால் குரங்கு நடுங்கியது.**

3. குருவி கூறிய அறிவுரை யாது?

**குருவி குரங்கிடம் நீயும் என்னை போல் கூடி கட்டி வாழலாமே என்று அறிவுரை கூறியது.**

4. குரங்கு கோபத்தோடு என்ன செய்தது?

**குரங்கு கோபத்தோடு குருவியின் கூட்டை பிய்த்து எறிந்தது.**

5. இந்த கதையால் நாம் உணரும் நீதி யாது?

**தீயவர்களுக்கு அறிவுரை கூறினால் நமக்கு தீங்காகவே வந்து சேரும்.**

## அன்றாடக் காலைக் கடமைகள்

I. **பொருள் தருக:**

1. துயில் - தூக்கம்
2. அண்டை - பக்கத்து
3. அதிகாலை - விடியும் பொழுது

II. **கோடிட்ட இடங்களை எழுதுக:**

1. வைகறை **துயில்** எழு.
2. சுத்தம் **சுகம்** தரும்.
3. காலை எழுந்தவுடன் **படிப்பு.**
4. குளிர்ந்த **நீரில்** குளிக்கப் பழகு.
5. வயிற்றுக்கு **சோறிடல்** வேண்டும்.
6. கடிகாரம் **ஓடும்** முன் ஓடு.

III. **வினா விடை:**

1. குமரன் காலை எத்தனை மணிக்கு எழுந்தான்?

**குமரன் அதிகாலை 6:00 மணிக்கு எழுந்தான்.**

2. குமரன் எவற்றை சுத்தம் செய்தான்?

**குமரன் வாய் முகம் ஆகியவற்றை சுத்தம் செய்தான்.**

3. எப்போது படிக்க வேண்டும்?

**காலைப் பொழுதில் படிக்க வேண்டும்.**

4. எந்த நீரில் குளிக்க ப்பழக வேண்டும்?

**குளிர்ந்த நீரில் குளிக்கப் பழக வேண்டும்.**

5. குமரன் காலையில் என்ன உண்டான்?

**குமரன் சிற்றுண்டி உண்டான்.**